பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
25 04 2025 FRIDAY 7 15 AM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் பங்கேற்க குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வாடிகன் செல்கிறார்.

- பஹல்காம் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக பல்வேறு நாடுகளுக்கு வெளியுறவு அமைச்சகம் எடுத்துரைத்துள்ளது.

- ராணுவ தலைமைத் தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி இன்று ஜம்மு காஷ்மீர் செல்கிறார்.

- கூட்டுறவுத்துறையில் கடந்த 3 ஆண்டுகளில் 60 முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. கிரிஷன் பால் குர்ஜார் கூறியுள்ளார்.

- துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் பங்கேற்க குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வாடிகன் செல்கிறார்.

நாளை செயின்ட் பீட்டர் பஸிலிகாவில் போப் பிரான்சிஸின் உடலுக்கு அவர் அஞ்சலி செலுத்துவதுடன், இறுதி ஊர்வலத்திலும் பங்கேற்கவுள்ளார்.

போப் பிரான்சிஸின் இறுதிச்சடங்கை ஒட்டி, இந்தியாவில் நாளை அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<<<<>>>>>>>>>>

தீவிரவாதத்திற்கு எதிராக மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு அளிப்பதாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்ற கட்சிகள் தெரிவித்துள்ளன

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து புதுதில்லியில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், 15 அரசியல் கடசிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, அனைத்துக் கட்சிகளும் தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளதாக கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிராக மேலும் உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்று அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க, மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக திரு. கிரண் ரிஜிஜு குறிப்பிட்டார்.

தீவிரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, இதுதொடர்பாக மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு அளிப்பதாக கூறினார்.

ஜம்மு காஷ்மீரில் அமைதியை நிலைநாட்ட தேவையான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தினார்.

தேசியவாத காங்கிரஸின் திரு. பிரஃபுல் பட்டேல், திமுகவின் திரு. திருச்சி சிவா, AIMIM கட்சியின் திரு. அசாதுதீன் ஓவைசி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளும், மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

<<<<<<<<<<>>>>>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக பல்வேறு நாடுகளுக்கு வெளியுறவு அமைச்சகம் எடுத்துரைத்துள்ளது.

ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான், போலந்து, இங்கிலாந்து நாடுகளின் தூதரக அதிகாரிகளுக்கு இந்த தாக்குதல் குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீனா, கத்தார், மலேசியா, ஓமன், இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளிடமும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக அது கூறியுள்ளது.

தற்போதைய சூழ்நிலை மற்றும் இந்தியாவின் செயல்பாடுகள் குறித்து வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி எடுத்துரைத்தார்.

தீவிரவாத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாடுகள் முழு ஆதரவு அளித்துள்ளதாக வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

<<<<<<<<<<>>>>>>>>>>

ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி இன்று ஜம்மு காஷ்மீரில் ஆய்வு மேற்கொள்கிறார்.

ஸ்ரீநகர் செல்லும் அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து அங்கு நிலவும் சூழல் குறித்தும் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காஷ்மீர் பள்ளத்தாக்கு மற்றும் எல்லைக் கட்டுப்பாடு கோட்டுப் பகுதிகளில் தீவிரவாதிகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை ராணுவ உயரதிகாரிகள் தலைமைத் தளபதியிடம் எடுத்துரைக்கவுள்ளனர்.

<<<<<<<<<<>>>>>>>>>>

கூட்டுறவுத் துறையில் கடந்த 3 ஆண்டுகளில் 60 முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. கிரிஷன் பால் குர்ஜார் கூறியுள்ளார்

சண்டிகரில் கூட்டுறவுத்துறை தொடர்பான இரண்டு நாள் மாநாட்டை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் கூட்டுறவுத்துறை மிகப் பெரிய வளர்ச்சியை எட்டும் என்று அவர் கூறினார்.

நாடுமுழுவதும் உள்ள எட்டரை லட்சம் கூட்டுறவு சங்கங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இந்த சங்கங்கள் பல்வேறு விதமான சேவைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திரு. கிரிஷன் பால் குர்ஜார் தெரிவித்தார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

திரவ ஆக்ஸிஜனை பயன்படுத்தி, 200 டன் செமி கிரையோஜனிக் எஞ்சினின் முதலகட்ட சோதனை வெற்றியடைந்துள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் கூறியுள்ளார்.

நெல்லை மாவட்டம், திசையன்விளையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கன்னியாகுமரியில் விண்வெளிப் பூங்கா அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

(வாய்ஸ் பைட் - திருமலை 51 செகண்ட்ஸ்)

<<<<<<<<<<>>>>>>>>>>

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் மாநாட்டை குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், உதகையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

மூன்று நாள் பயணமாக தமிழகம் வரும் அவர், இன்றும் நாளையும் உதகமண்டலத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

குடியரசு துணைத்தலைவரின் வருகையை ஒட்டி உதகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாளை மறுநாள் கோவை செல்லும் திரு. ஜெக்தீப் தங்கர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

தமிழகத்தில் ரயில்வே கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

மதுரை கோட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக, தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான ஆலோசனைக் கூட்டம், மதுரையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குப் பின் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் திண்டுக்கல் - பழநி, பொள்ளாச்சி — பழநி, மதுரை — போடி, காரைக்குடி — விருதுநகர் உள்ளிட்ட வழித்தடங்கள் முழுமையாக மின்மயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை கோட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு ரயில் நிலையங்களில் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ், மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<<<<>>>>>>>>>>

உத்தரபிரதேசத்தில் 10 மற்றும் 12ஆம் வகுப்புக்கான பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியாகவுள்ளன.

இன்று பிற்பகல் 12.30-மணிக்கு வெளியாகும் தேர்வு முடிவுகளை, மாணவர்கள் அதற்கான இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என்றும், மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<<<>>>>>>>>>>

சிக்கிம் மாநில காவல்துறை பணி ஒதுக்கீட்டில் அக்னிவீர் படைப்பிரிவினருக்கு 20 சதவீத ஒதுக்கீடு வழங்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங், காங்டாக்கில் இதனை தெரிவித்தார்.

சிக்கிம் காவல்படையின் பல்வேறு நிலையிலான பணிகளில் முன்னாள் ராணுவத்தினருக்கு வயது வரம்பில் 10 ஆண்டுகள் தளர்வு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வர்த்தக பணிகளில் முன்னாள் ராணுவத்தினர் ஈடுபட விரும்பினால் அவர்களுக்கு அரசு கடைகள் ஒதுக்கீடு செய்யும் என்றும் திரு. பிரேம்சிங் தமாங் தெரிவித்தார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் 6-4, 6-4 என்ற செட்கணக்கில் அர்ஜென்டினாவின் Justina Maria-வை வென்றார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Zeel Desai காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 3-6, 7-5, 6-3 என்ற செட்கணக்கில் ஸ்லோவாக்கியாவின் Laura Cilekova—வை வென்றார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி 11 ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

சென்னையில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இன்றிரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<<<<>>>>>>>>>>

சைப்ரஸ் சர்வதேச இளையோர் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

சைப்ரஸின் Nicosia –வில் நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் Showrya Khan Javvaji, Girivasan Saravanakumar, Sai Nachikete ஆகியோர் ஆடவர் பிரிவிலும், Ishita Negi மகளிர் பிரிவிலும் பங்கேற்கின்றனர்.

<<<<<<<<<<>>>>>>>>>>

ஆசிய யோகாசன சாம்பியன் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

<<<<<<<<<<END>>>>>>>>>>